பக்கங்கள் 26

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

காணி விடுவிப்பு தொடர்பில்

## ஒரு மாதத்துக்குள் பதிலளிக்க ராணுவத்துக்கு ரணில் பணிப்பு

வலி. வடக்கிலுள்ள விவசாயக் காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஒரு மாத காலத்துக்குள் சாதகமான நிலைப்பாட்டை வழங்குமாறு இராணுவத்துக்கு

02

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 06 ஞாயிற்றுக்கிழமை 18.02.2024 அதிர்வு 202





# நாடாளுமன்றத்தை ஏப்ரலில் கலைக்க ஜனாதிபதி முடிவு?

## முன்கூட்டியே பொதுத் தேர்தலுக்குத் தயாராகின்றார்

நாடாளுமன்றத்தை ஏப்ரல் மாத இரண்டாம் வாரத்தில் கலைத்துப் பொதுத் தேர்தலுக்குச் செல்ல ஜனாதிபதி ரணில் தீர்மானித்துள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய ஜூலை நடுப்பகுதியில் தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் அரசியல் நிலைமை தொடர்பில் அரச புலனாய்வுத்துறை வழங்கிய தகவல்களின் அடிப்படையில் ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

02

# தலைமை உட்பட சகல பதவிகளுக்கான புதிய தெரிவுகளை மீள நடத்தத் தயார்!

## சிறீதரன் அதிரடி அறிவிப்பு



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி உட்பட கட்சியின் அனைத்துப் பதவிகளுக்கான புதிய தெரிவுகள் அனைத்தையும் மீள நடத்துவதற்குத் தயாராக உள்ளேன் என்று அக்கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு உள்ளிட்ட தெரிவுகளுக்கு எதிராகவும், நாளை 19ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 17ஆவது தேசிய மாநாட்டுக்கு எதிராகவும் திருகோணமலை, யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை அடுத்து இடைக்காலத் தடை கட்டாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அடுத்த கட்டமாக எவ்விதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பது தொடர்பில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டபோதே சிறீதரன் எம்.பி.

02

கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 18/02/2024




# புதிதாகக் கனடா வருகின்றவர்களை ஏமாற்றும் போலிச் சட்டத்தரணிகள்!

## மொன்ரியல் சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை

**புதிதாகக் கனடா வருபவர்களை போலி சட்டத் தரணிகள் ஏமாற்றி வருகின்றனர் என மொன்ரியல் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

**புதிதாக கனடா வருபவர்களை இலக்கு வைத்து, அவர்களுக்கு கனடா மீதான கனவுகளை விதைத்து அதிகளவு பணத்தை இந்த போலி சட்டத்தரணி கள் அறவிடுகின்றனர் என சட்டத்தரணிகள் சங்கத் தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

கனடாவில் புதிதாக வாழ்க்கையை ஆரம்பிக்கும் ஆவலுடன் பிரவேசிக்கும் பணமுள்ளவர்கள் மற்றும் பணமற்றவர்கள் இந்தக் கும்பலின் சதி வேட்டைக்கு இலக்கா கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் மக்கள் மத்தியில் – குறிப்பாக புதிதாகக் கனடாவிற்கு வந்தவர்களுக்கு – விழிப்புணர்வை ஏற் படுத்தும் பிரசாரம் ஒன்றை கடந்த வாரத்தில் மொன்ரியல் சட்டத்தரணிகள் சங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்த விழிப்புணர்வு பிரசாரத்தில் எவ்வாறு போலி சட்டத் தரணிகளை அடையாளம் காண்பது, எவ்வாறான போலி வாக்குறுதிகளை அவர்கள் வழங்குவார்கள், சட்டரீதியான உதவியைப் பெறக் கூடிய இடங்கள் எவை என்பன குறித்த தகவல்கள் உள்ளடங்கியுள்ளன.

போலி சட்டத்தரணிகளால் ஏமாற்றப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் இத்தகைய விழிப்பு ணர்வு பிரசாரம் அத்தியாவசியமானது என சட்டத்தரணி கள் சங்கம் தெரிவிக்கின்றது.




# மொன்ரியலின் லிட்டில் இத்தாலியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை!

மொன்ரியலின் புறநகரப் பகுதியான லிட்டில் இத்தாலி எனக் கூறப்படும் பகுதியில் நேற்று (பெப்ரவரி 18) காலை துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக் காகி 28 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தப் பகுதியில் இருந்து துப்பாக்கி சத்தம் கேட்பதாக காவல்துறையின் 911 என்கிற அவசர தொலைபேசி இலக்கத் திற்கு பெறப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்து காவல்துறை சம்பவ இடத் திற்கு விரைந்துள்ளது.

இதன்போது உடலின் மேற்பகுதி யில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இளைஞரை காவல்துறை கண்டு, அவரை காப்பாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதி லும், சம்பவ இடத்திலேயே அவரு டைய உயிர் பிரிந்துள்ளது.

வாகனத்தில் வந்த ஒன்று அல்லது இரண்டு சந்தேகநபர்கள் இந்தச்இளை ஞரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டுள்ளனர் என அறியக் கிடைப் பதாக காவல்துறை தெரிவிக்கின்றது.

ஆனாலும், இது வரை சம்பவம் தொடர்பில் யாரும் கைது செய்யப்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# நீண்ட வார இறுதிக்கு வெளியிடப் பயணமா? பனிப்பொழிவு அதிகம் எச்சரிக்கை அவசியம்!



பெப்ரவரி 19ஆம் திகதி, திங்கட் கிழமையன்று கனடா முழுவதிலும் குடும்ப தினத்திற்கான விடுமுறை காரணமாக நீண்ட வார இறுதியை வெளியிட பயணங்களுடன் திட்ட மிட்ள்ளவர்களை போக்குவரத்தில் கவனமாக இருக்குமாறு வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வார இறுதியில் கடும் பனிப் பொழிவு காரணமாக வீதிகளில் பனி மூட்டம் அதிகமாக இருப்பதால், வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனத்தைச் செலுத்த வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்டாரியோ மாநிலத்தின் தென் பகுதியிலேயே இதன் தாக்கம் அதி கம் இருக்கும் என எதிர்வு கூறப் பட்டுள்ளது.




# டொரன்டோவின் நோர்த்யோர்க்கில் சுடப்பட்ட இளைஞர் உயிரிழப்பு

டொரன்டோவின், நோர்த்யோர்க் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்ப வத்தில் காயமடைந்து வைத்தியசா லையில் சிகிச்சைப் பெற்று வந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

சனிக்கிழமை மாலை 3 மணி யளவில் காவல்துறைக்கு கிடைத்த தொலைபேசி அழைப்பின் அடிப்படை யில், சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் பாதிக்கப்பட்டவரை கண்டு, அவரை வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைக்காக கொண்டு சென்றுள்ளனர்.

எனினும், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந் துள்ளார்.

இதேவேளை, சந்தேக நபர் பய ணித்ததாகக் கருதப்படும் வாகனத்தைத் தேடி காவல்துறையினர் விசாரை ணகளை ஆரம்பித்துள்ளனர்.



# வைத்தியசாலைக்கு வெளியே போராடியவர்களை அச்சுறுத்த முயன்றவருக்கு எதிராகக் குற்றச்சாட்டு

டொரன்டோ வைத்தியசாலைக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தீங்கு விளைவிக்கப் போவதாக அச்சுறுத்திய சந்தேகநபருக்கு எதிராக டொரன்டோ காவல்துறை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.




பெப்ரவரி 14ஆம் திகதி டொரன்டோ காவல்துறைக்கு அழைப்பு எடுத்த இந்தச் சந்தேகநபர், தமது மனவிரக்தியை வெளிப்படுத்தி, வைத்தியசாலைக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தீங்கு விளைவிக்கப் போகிறார் என எச்சரிக்கை விடுத்தார் என்று காவல்துறை நேற்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக 49 வயதுடைய சந்தேகநபருக்கு எதிராக உயிர்அச்சுறுத்தல் விடுத்தமையின் கீழ் குற்றச்சாட்டுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டொரன்டோவின் யூத வைத்தியசாலையாக கருதப்படும் மவுன்ட் சினாய் வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை (பெப்ரவரி 12) அணிதிரண்ட போராட்டக்காரர்கள் பலஸ்தீன கொடியை வைத்துக் கொண்டு, பலஸ்தீனத்திற்கு ஆதரவான கோஷங்களை இட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## நடுவானில் டொரன்டோ விமானத்தின் கதவைத் திறப்பதற்கு முயன்ற பயணி!

வென்கூவர் நகரில் இருந்து டொரன்டோ நோக்கி வந்த விமானம் அவசரமாக வின்னிபெக் நகரில் தரையிறக்கப்பட்டுள்ளது.

பயணியொருவர் விமானத்தின் கதவைத் திறப்பதற்கு முயற்சித்தமையினாலேயே, இந்த விமானம் வின்னிபெக் நகரில் தரையிறக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (பெப்ரவரி 16) இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் 18 வயதான பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த சந்தேகநபர் மீது விமானத்திற்கு ஆபத்து விளைவிக்க முயற்சித்தமை தொடர்பான குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காவலில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார் எனவும், அவர் மீதான வழக்கு விசாரணைகள் வின்னிபெக் நீதிமன்றத்தில் எதிர்வரும் மே மாதம் 23ஆம் திகதி நடைபெறும் எனவும் காவல்துறை குறிப்பிட்டுள்ளது.


சிறிது நேரம் வின்னிபெக்கில் தரித்திருந்த விமானம், சிறிது நேரத்தில் டொரன்டோ பயணித்து, பயண இடத்தை அடைந்ததாகக் குறித்த விமானசேவைகள் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## பிரம்டன் நகரக் கார் விபத்தில்
# காயமுற்றவர் நிலைமை மோசம்

பிரம்டன் நகரில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த 40 வயது நபர் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை நெடுஞ்சாலையில் பயணித்துக் கொண்டிருந்த போது, வாகனம் கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள பாலம் ஒன்றில் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, இந்த சம்பவத்தில் வாகனத்தில் பயணித்த ஏனைய நபர்களுக்கும் காயம் ஏற்பட்ட போதிலும், அவர்கள் உடல்நிலை தேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


Peel Regional Police
@PeelPolice · Follow

COLLISION:
- Orenda Road/West Drive
- 1 vehicle involved
- 1 person transported to a trauma center with life threatening injuries
- Road closures
- Use alternate routes
- Major Collision Bureau will be attending
- C/R at 8:53 am
- PR24-0056451

# கொவிட் கட்டுப்பாடுகளை எதிர்த்துப் போராடியோர் 2 வருடங்களின் பின் மீண்டும் ஒட்டாவாவில் கூடினர்

கொவிட்-19 கட்டுப்பாடுகளுக்கு எதிரான நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் இரண்டு வருடங்களுக்கு பின்னர் மீண்டும் ஒட்டாவாவில் அமைந்துள்ள நாடாளுமன்றக் கட்டடத்திற்கு அருகில் நேற்று (சனிக்கிழமை) ஒன்று கூடினர்.



கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரியின் பிற்பகுதியில் கனேடிய நாடாளுமன்றத்திற்கு அருகில் அணிதிரண்ட ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் கனேடிய அரசாங்கத்தின் கொவிட்-19 கட்டுப்பாடுகளை கண்டித்து, பார ஊர்திகளையும், வாகனங்களையும் கொண்டு வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால், கனடாவின் தலைநகரில் அமைந்திருந்த நிர்வாக, வர்த்தகச் செயற்பாடுகள் பல வாரங்களுக்கு முடங்க நேர்ந்தது.

எனினும், கனேடிய மத்திய அரசாங்கம் அவசர காலச் சட்டத்தை பிரகடனப்படுத்தி 2022 பெப்ரவரி 17ஆம் திகதி இந்தப் போராட்டத்தை கலைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# உணவுப்பாதுகாப்பின்மைப் பிரச்சினைகளை கையாள மாணவருக்கு புதிய கற்கை நிகழ்ச்சி

## மவுண்ட் ரோயல் பல்கலைக்கழகம் ஆரம்பித்துள்ளது

மாணவர்கள் உணவுப்பாதுகாப்பின்மை பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பிலான புதிய கற்கை நிகழ்ச்சி ஒன்றை மவுண்ட் ரோயல் பல்கலைக்கழகம் ஆரம்பித்துள்ளது.

சுமார் 50 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் உணவு பாதுகாப்பின்மையை உணர்கின்றனர் எனவும், அல்லது நாளாந்த உணவுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் கல்கரி மவுண்ட் ரோயல் பல்கலைக்கழகம் அண்மையில் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுகளின் முடிவுகளின் விளைவாகவே கனேடிய இயற்கை வளங்கள் திணைக்களத்தால் நிதியளிக்கப்பட்ட இந்த புதிய நிகழ்ச்சியை மவுண்ட் ரோயல் பல்கலைக்கழகம் ஆரம்பித்துள்ளது.

உணவைப்வ்பெற்றுக் கொள்ள முடியாமையினால், 20 சதவீதத்திற்கும், 30 சதவீதத்திற்கும் இடைப்பட்டவர்கள் கடந்த மாதத்தில் ஒருவேளை உணவைத் தவிர்த்துள்ளனர் என இந்த கற்கையின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

அதிகரித்து வரும் வகுப்பு கட்டணங்கள், மளிகைப் பொருள்களின் விலைகள் மற்றும் வீட்டு அல்லது அறை வாடகை என்பன உணவுப் பாதுகாப்பின்மையைத் தூண்டும் பிரதான காரணிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

# டொரன்டோ, மிட்டவுன் பகுதியில் குழந்தை ஒன்றை கடத்த முயற்சித்த சந்தேகநபரின் படம் வெளியானது



டொரன்டோ, மிட்டவுன் பகுதியில் குழந்தை ஒன்றை கடத்துவதற்கு முயற்சித்த சந்தேகநபரின் படத்தை காவல்துறை வெளியிட்டுள்ளது.

மிட்டவுன் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளுக்குச் சென்ற காவல்துறையினர், இந்தத் தாக்குதல் சம்பவம் குழந்தை கடத்தல் முயற்சியுடன் சம்பந்தப்பட்டது என கண்டறிந்துள்ளனர்.

சிறு குழந்தையை வைத்துக் கொண்டு நடந்து சென்று கொண்டிருந்த இருவரை சந்தேக நபரான பெண் ஒருவர் பின்தொடர்ந்தார் எனக் காவல்துறை தெரிவிக்கின்றது.

குறித்த சந்தேக நபரான பெண் அவர்களை அணுகி குழந்தையை எடுக்க முயன்றதாக கூறப்படுகிறது. பெரியவர்களில் ஒருவர் தலையிட முயன்றபோது, பெண் அவர்களைத் தாக்கினார் எனக் காவல்துறை தெரிவித்தது.

நேற்று சனிக்கிழமை (பெப்ரவரி 17) மாலை, சந்தேகநபர் குறித்த விவரங்களை காவல்துறை வெளியிட்டது.




# உறவுகளுக்கு சர்வதேச நீதி வேண்டி கிளிநொச்சியில் செவ்வாய் போராட்டம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு சர்வதேச நீதி வேண்டி கிளிநொச்சியில் நாளைமறு தினம் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு அனைவரையும் ஆதரவு வழங்குமாறு வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி அழைப்பு விடுத்துள்ளார்.

"போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் நிறைவடைந்து எட்டு ஆண்டுகள் ஆரம்பிக்கின்றது. எங்களுடைய பிள்ளைகளுக்கு இலங்கை அரசாங்கம் நீதி வழங்காது. எனவே சர்வதேசத்திடம் நீதியை வேண்டி நிற்கின்றோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஒரு மாதத்துக்குள்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் வலி. வடக்கு காணி விடுவிப்புத் தொடர்பாக அண்மையில் ஆராயப்பட்டது. யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரனும் பங்கேற்றிருந்தார். விவசாயக் காணிகள் விடுவிப்பு, இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலுள்ள ஆலய வழிபாட்டுக்கான அனுமதி என்பன தொடர்பில் அங்கு ஆராயப்பட்டிருந்தன.

இந்தநிலையில், வலி. வடக்கிலுள்ள விவசாயக் காணிகளை மக்களிடம் மீள ஒப்படைப்பது தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டை ஒரு மாதத்துக்குள் வெளிப்படுத்துமாறு கோரி இராணுவத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இராணுவத்தினர் தம் வசம் வைத்துள்ள 700 ஏக்கர் விவசாயக் காணியில் முதல் கட்டமாக 300 ஏக்கர் வரையில் விடுவிப்பதற்கு சாதகமான நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

### தலைமை உட்பட...

மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"75 வருட கால அரசியல் பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக தற்போது வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, தொடுக்கப்பட்ட வழக்குகள் தொடர்பில் நீதிமன்றத்தின் ஊடாக கட்சி அதனை முறையாகக் கையாளுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேநேரம், கட்சியின் நிர்வாகம் தொடர்பில் புதிய தெரிவுகள் இடம்பெறுள்ளமையானது யாப்பு விதிகளுக்கு முரணானது என்றும் கூறப்பட்டுள்ளது.

என்னைப் பொறுத்தவரையில், எனது தலைமைத் தெரிவு உட்பட கட்சியின் அனைத்து பதவி நிலைகளுக்கான புதிய தெரிவுகளையும் மீளவும் செய்வதற்கு நான் தயாராகவே உள்ளேன்.

விசேடமாக கட்சியின் மூலக்கிளை தெரிவுகளில் இருந்து அனைத்தும் மீள நடைபெறுவதாக இருந்தால் கூட அதனை ஏற்றுக்கொள்வதில் எனக்கு எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை.

மேலும், தற்போது புதிய தெரிவுகள் சம்பந்தமான விடயங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பிலேயே தங்கியுள்ளன. ஆகவே, நீதிமன்றத்தின் தீர்மானத்தைப் பின்பற்றுவதற்கும் நான் தயாராக உள்ளேன்.

விசேடமாக, நீதிமன்றம் புதிய நிர்வாகத் தெரிவுகள் தவறாக இருக்கின்றன என்று தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டுமாக இருந்தால் நீதிமன்றத்தின் மேற்பார்வையுடன் அதனை மீளச் செய்வதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

எவ்வாறாயினும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள்ளும், எதிராகவும் பல சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்தச் சூழ்ச்சிகள் பற்றி புரிதல்களும் எமக்குத் தெளிவாக உள்ளன.

எனவே, அனைத்து தடைகளையும் முறையாகக் கையாண்டு அவற்றை கடந்து எமது பாரம்பரிய அரசியல் கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக தற்போது செயற்பட்டு வருகின்றோம்." – என்றார்.

### நாடாளுமன்றத்தை...

அதேபோல் தேர்தலுக்காக இப்போதே தயாராகுமாறு ஜனாதிபதி ரணில் தனது நெருங்கிய சகாக்களைப் பணித்துள்ளார். எதிர்க்கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்கு வருவோரை ஏற்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியிலிருந்து அரசியல்வாதிகளைக் கொண்டுவரும் செயற்பாட்டின் முதல் அம்சமாக சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் எம்.பி. ரவி கருணாநாயக்கவின் கொழும்பு இல்லத்தில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் உட்பட 14 எம்.பிக்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். இதில் ஜனாதிபதி ரணில் கலந்துகொண்டு அரசியல் நிலைமைகளை விளக்கியுள்ளார்.

இதற்கிடையில் ஜனாதிபதி ரணில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான புதிய அரசியல் கூட்டணியொன்றை நாடாளுமன்றத் தேர்தலில் களமிறக்கவுள்ளதால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் ஆகியோர் ஏற்கனவே ரணிலுக்கான தமது ஆதரவைப் பகிரங்கமாக வெளியிட்டுள்ளனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு என்ற கோரிக்கையை முன்வைத்து பொதுத் தேர்தலில் வாக்குக் கோர ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று தெரிகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் குழப்பம்

இன்னும் ஏழு முதல் எட்டு மாதங்களுக்குள் தமது தற்போதைய ஜனாதிபதிப் பதவி காலத்தை பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத்துக்குள் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்து என்ன செய்வது என்ற தீர்மானத்தை எடுக்க இயலாத தடுமாற்றத்தில் உழலுகின்றார் என்று கூறப்படுகின்றது.

எதிர்பாராமல் கிட்டிய ஜனாதிபதிப் பதவியைத் தக்க வைப்பதற்காக அடுத்த தேர்தலில் குதிப்பதா? குதிப்பதாயின் அதற்கு என்ன அரசியல் வியூகத்தை வகுப்பது? தேர்தலில் குதிக்காவிட்டால் குறைந்த பட்சம் இப்போது நலிவுற்று, அழிவுற்றுப் போய் கிடக்கும் தமது ஐக்கிய தேசிய கட்சியைத் தூக்கி நிறுத்துவதற்கு இந்த ஜனாதிபதி பதவியை வைத்துக் கொண்டு கடைசிக் கந்தாய முயற்சியாக என்ன நடவடிக்கை எடுப்பது? - என்பவை குறித்தெல்லாம் ஒரு தீர்மானம் எடுக்க முடியாத நிலையில், பல்வேறு கருத்து நிலைப்பாடுகளுடன் அவர் மல்லுக் கட்டுகின்றார் என்று கூறப்படுகின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை ஒழிக்கும் சாக்கில் ஒரு வருடம் தமது தற்போதைய பதவியை நீடிக்கலாம் என்ற அவரின் தந்திர யோசனை சரிபட்டு வராது, அதற்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பெரும்பான்மை ஆதரவு தமக்குக் கிடைக்காது என்பதை அவர் தெளிவாகப் புரிந்து கொண்டு விட்டார்.

தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் பல சமயங்களிலும் தொங்கு நாடாளுமன்றமே உருவாகின்றது என்பது அம்பலமான உண்மை. இந்தப் பின்புலத்தில் நிறைவேற்றதிகாரம் வலிமையாகக் குவிக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி ஆட்சி முறைமையை நீக்கி, நாடாளுமன்றத்துக்குப் பதில் கூற வேண்டிய பிரதமர் தலைமையிலான ஆட்சி முறைமை வருமாயின், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சிகள் கூட பிரதமரையும் அரசையும் ஆட்டிப்படைக்கும் ஆபத்து நேர்ந்து விடும். ஆகையால் இப்போதைய சந்தர்ப்பத்தில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை நீக்க முயல்வது நாட்டுக்குப் பேராபத்தாகிவிடும் என்று பௌத்த - சிங்கள பேரினவாதத் தரப்புகள் கருதுகின்றன. அதனால் அவை நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை நீக்கும் எந்த இணக்கத்துக்கும் வரா என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாயின், அதற்கு முன்னர் தற்போதைய தேர்தல் முறைமை மாற்றியமைக்கப்பட வேண்டும், அதன் பின்னரே நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பது குறித்துச் சிந்திக்கத் தாங்கள் இணங்குவர் என்று பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் ஏற்கனவே கூறிவிட்டார்.

இந்தப் பின்புலத்தில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழித்தல் என்ற பெயரில் அதிகாரத்தில் நீடிக்கும் தமது எத்தனம் முன்நகராது, அதற்குச் சாத்தியமேயில்லை என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்கு புரிந்துவிட்டது. அதனால் அந்த முயற்சியை அவர் கைவிட்டு விட்டார் என்று இப்போது கூறப்படுகின்றது.

வருவது வரட்டும் என்று நேரடியாக ஜனாதிபதி தேர்தலுக்குப் போகலாம் என்றால், அதற்கும் பலமான அணிகள் அவர் பக்கம் சேருவதான சாத்தியப்பாடுகள் தென்படவில்லை. ஒட்டுமொத்தத்தில் கள நிலைமை - அரசியல் சூழல் - அவரை மலைக்க வைப்பதாக இருக்கின்றது எனத் தெரிகிறது.

வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிடாமல் போனால், அல்லது போட்டியிட்டுத் தோற்றுப் போனால், அதுவே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலையான அழிவின் தெளிவான ஆரம்பமாகி விடும் என்று கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன. ஜனாதிபதிப் பதவி கையில் இருக்கையில், அதை வைத்துக்கொண்டு பொதுத் தேர்தலை ரணிலின் கட்சி எதிர்கொள்ளுமாயின் கணிசமான எம்.பிக்கள் பதவிகளையாவது அக்கட்சி பெற வாய்ப்பு உண்டு எனக் கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன. அதனால் ரணில் விக்கிரமசிங்கவை அவர் ஜனாதிபதிப் பதவியில் இருக்கும் போதே நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலை நடத்த உத்தரவிடுமாறு அவை நச்சரிக்கின்றனவாம்.

இப்படி கட்சி முக்கியஸ்தர்கள் சிலரின் வலியுறுத்தலுக்கு விட்டுக் கொடுத்து, பொதுத்தேர்தலை நடத்த முற்பட்டு, அதில் பிரதான இரு கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும், ஜே.வி. பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியும் கணிசமான வலுப்பெற்று, தங்கள் பலத்தை உறுதியாக வெளிப்படுத்தி விட்டால், அதன் பின்னர் அத்தரப்புகளை ஆட்டி அசைப்பதே முடியாத காரியம் என்பது ரணிலுக்கு நன்கு தெரியும்.

இதனால் இவ்விடயத்தில் ஒரு முடிவு எடுக்க முடியாத தடுமாற்றத்தில் - தீர்க்கமான, திட்டவட்டமான தீர்மானத்தை எடுக்க இயலாத குழப்பத்தில் - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

எதிர்பாராத விதமாக அதிர்ஷ்டமாகக் கிடைத்த இரண்டரை ஆண்டு கால ஜனாதிபதி பதவிக் காலத்தைச் சரியாகப் பயன்படுத்தி, இதுவரை வீழ்ந்து நலிவுற்றுக் கிடக்கும் தமது கட்சியையாவது தாம் சற்றுத் தூக்கி நிறுத்தாவிட்டால், தம்மை போன்ற அரசியல் முட்டாள் எவரும் இருக்க மாட்டார் என ரணில் உணர்கின்றார் என்பதும் புரிகின்றது. அதனால் தமது ஜனாதிபதி பதவிக் காலத்திலேயே பொதுத் தேர்தலை நடத்தி முடிக்க அவர் முயல்வார் என்பதுதான் இப்போதே நிலைமையாகும்.

# ஈழத்தில் சிறுவர் இலக்கியமும் குழந்தைக் கவிஞர் அம்பியும்

-ஐங்கரன் விக்கினேஸ்வரா-

**( ஈழத்து சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் கவிஞர் அம்பியின் காத்திரமான படைப்புகள் வரலாற்றில் நிலைத்திருக்கும். கவிஞர் அம்பியின் 95 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு (பெப்ரவரி 17, 1929) இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது )**



அம்மாவின் தாலாட்டுப் பாடலில், இனிய தேனாகச் சுவை ததும்பும் வரிகளூடாகவே தொடங்குகிறது சிறுவர் இலக்கியத்தின் வரலாறு. குழந்தைப் பாடல்களின் இலக்கிய இசைவாக, ஆரம்பப் புள்ளி அம்மாவின் ஆராரோ பாடல்கள்தான். அதன் வழியே குழந்தை கொஞ்சம் வளர்ந்து அதே போன்ற பாடல்களைக் கேட்க ஆவலாக இருக்கும். இதனூடகவே சிறுவர் இலக்கியம் வளர்ச்சி அடைந்ததை காணலாம்.

## அம்மாவின் தாலாட்டில் எழுந்த இலக்கியம்

சந்த நயத்துடன் பாடப்படும் பாடல் பாடுபவருக்கும் கேட்பவருக்கும் மகிழ்வைக் கொடுக்கின்றது. பாடுபவருக்கு உற்சாகமும் தொம்பும் அளிக்கின்றது. உலகை மறந்து ரசிக்க வைத்துவிடும். இவ்வகையில் அம்மாவின் தாலாட்டுப் பாடலில் தொடங்கிய சிறுவர் பாடல்களின் பரிணாம வளர்ச்சியே சிறுவர் இலக்கியமாக அமைந்துள்ளது.

இன்றைய சிறுவர்களே, நாளைய பெரியவர்கள். இன்றைய சிறுவர்களைச் சிறப்பான முறையில் வளர்த்து எடுக்கும் போதே நாளைய உலகம் சிறப்பான உலகமாக அமையும். இந்த நோக்கத்துடனேயே கதைகளுக்கு ஊடாகவும் பாடல்கள் மூலமும் அறிவுரை புகுத்தும் இலக்கியங்கள் தோன்றின. அம்மாவின் தாலாட்டுப் பாடலில் கூட ஆயிரமாயிரம் அறிவுரைகள் பொதிந்திருக்கும்.

சிறுவர்களுக்கான பாடல்கள் மிக முக்கியமான இடத்தைச் சிறுவர் இலக்கியத்தில் பெற்றுக் கொள்கிறது.

நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலைமேலே ஏறி வா
மல்லிகைப்பூ கொண்டு வா

என்று நிலாவைக் காட்டிச் சோறு ஊட்டிய தாயின் வாய்மொழி இலக்கியமாகத் தொடங்கியதே சிறுவர் இலக்கியம் எனக் கருதலாம். பாட்டி வடை சுட்ட கதை போன்று குழந்தைகளை உறங்க வைக்க கூறிய தாயின் வாய்மொழிக் கதையிலிருந்து சிறுவர் இலக்கியம் ஆரம்பமாகின. தாயின் ஆராரோ ஆரிவரோ என்ற தாலாட்டுப் பாடலுடன் சிறுவர் பாடல்கள் தொடங்கின.

## யாழ். பரியோவான் மாணவன் அம்பி!

இத்தகைய சிறுவர் இலக்கிய படைப்புக்களை தாயகத்தில் மாத்திரமின்றி புலம்பெயர் மண்ணிலும் படைத்த ஈழத்தைச் சேர்ந்த அம்பி என்று அழைக்கப்படும் இராமலிங்கம் அம்பிகைபாகர் சிறுவர் இலக்கிய வரலாற்றில் காத்திரமான பங்களிப்பை ஆற்றியுள்ளார்.

குழந்தைக் கவிஞன் என்றும் ஈழத்தின் தேசி கவிநாயகம் பிள்ளை என்றும் போற்றப்படும் கவிஞர் அம்பி, எளிமையும் தமிழின் அழகும் ஒருங்கே கூடியமையும் அவர் பாடல்கள் பல குழந்தைகளின் நாவில் இன்றும் தவழ்கின்றன. தமிழ் மொழி வளர்ப்பு, கவிதை என்று பல தளங்களில் சாதனைகள் செய்த கவிஞர் அம்பி , பெப்ரவரி 17இல் தனது 95 ஆவது அகவையினுள் தடம்பதிக்கின்றார்.

இராமலிங்கம் அம்பிகைபாகர் என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர் அம்பி இலங்கையில் வடக்கே நாவற்குழி சொந்த ஊராகும். தனது ஆரம்பக் கல்வியை நாவற்குழி சி.எம்.எஸ். பாடசாலையிலும் பின்னர் உயர் கல்வியை யாழ். பரியோவான் கல்லூரியிலும் தொடர்ந்த அவர் அறிவியல் மற்றும் கணித ஆசிரியராக இலங்கையில் பல பாகங்களிலும் பணியாற்றியுள்ளார்.

ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவரான கவிஞர் அம்பி, ஆஸ்திரேலியாவில் தன் முதுமையிலும் தமிழுக்கு ஆற்றிய பணியை எவரும் மறவர். அம்பி ஆஸ்திரேலிய தமிழ் சமூகத்துக்குச் செய்த பங்களிப்பு மிகப் பெரிது.

தாயகத்திலும், புலம் பெயர் மண்ணிலும் அவர் பெற்ற விருதுகளும், பாராட்டுகளும் ஏராளம். இளமையில் கொழும்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் தமிழ் பாடநூல் ஆசிரியராகவும்

தொடர்ச்சி ▼

# ஈழத்தில் சிறுவர் இலக்கியமும் குழந்தைக் கவிஞர் அம்பியும்



தொடர்ச்சி ▲

பணியாற்றிய அம்பி, 1981 இல் பாப்புவா நியூகினி நாட்டுக்குப் பணி நிமித்தம் சென்று அதன் பின்னர் 1992 இல் ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்தார்.

ஈழத்து சிறுவர் இலக்கியம்

ஈழத்தின் சிறுவர் இலக்கிய வளர்ச்சி என்பது பெரும்பாலும் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டே ஆய்வாகவே அமைந்து வந்துள்ளது. ஆயினும் தற்போது வடக்கிலும் கிழக்கிலுமாக பல சிறுவர் இலக்கிய படைப்பாளிகளை காணக் கூடிய தாக உள்ளது. தமிழில் வெளிவந்த முதலாவது சிறுவர் பாடல் நூலாக இருப்பது யாழ்ப்பாணம் புலவர் தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் 1886 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட "பாலியக் கும்மி" என்பதே ஆராய்சியாளர்களின் கருத்தாகும்.

இதனைப் போல ஈழத்துக் சிறுவர் பாடல் மரபுக்கு வளமும் வனப்பும் சேர்த்த நவாலியூர் சோமசுந் தரப்புலவரை தலைசிறந்த குழந்தைக் கவிஞராக போற்றும் மரபு நம்மிடையே எப்போதும் உண்டு. அவரது பாடல்களில் ஒன்றான "ஆடிப்பிறப்பு" எனும் பாடலை சிறுவயதில் பாடிப்பாடிப் பரவசமடைந்திருக் கின்றோம்.

### கவிஞர் அம்பியும் சிறுவர் இலக்கியமும்

குழந்தைக் கவிஞன் என்றும் ஈழத்தின் தேசி கவிநாயகம் பிள்ளை என்றும் போற்றப்படும் கவிஞர் அம்பி 1950 ஆம் ஆண்டு முதல் எழுதி வருபவர். கவிதை, கவிதை நாடகம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு முதலான துறைகளில் அறியப்பட்டவர்.

கங்காரு தேசத்தின் சிட்னியில் தற்போது வசிக்கும் கவிஞர் அம்பி சிறுவர் இலக்கியத்துக்குக் குறிப்பா கப் புலம்பெயர் நாடுகளில் தமிழ்ச் சிறார்களுக்காக கவிதைகள் பலவற்றையும் படைத்துள்ளார்.

இலட்சியக் கோடி என்ற சிறுகதையின் மூலம் தமிழ் எழுத்துலகில் அறிமுகமானவர். இந்தச் சிறு கதை தினகரன் இதழில் வெளிவந்தது. அத்துடன் தமிழ் நாட்டில் அண்ணாதுரை முதலமைச்சராக இருந்த காலப் பகுதியில் அனைத்துலக தமிழா ராய்ச்சி மாநாட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட கவி தைப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற பெரு மைக்கு உரியவர். சிறுவர் இலக்கியத்துக்குப் பெரும் பங்காற்றிய அம்பியை ஈழத்தின் தேசிக விநாயகம் பிள்ளையாக சுபமங்களா இதழால் வர்ணிக்கப்பட்ட வர்.

### குழந்தைக் கவியின் படைப்புகள்

அம்பியின் வேதாளம் சொன்ன கதை கவிதை நாடகம், இலங்கையில் தாசீசியசின் நெறியாள்கை யிலும், யாழ்பாடி என்ற கவிதை நாடகம் ஆஸ் திரேலியாவில் அண்ணாவியார் இளைய பத்ம நாதனின் அண்ணாவியத்திலும் அரங்கேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட் டில் 'அண்ணா பதக்கத்துக்காக' கவிதைப்போட்டி நடைபெற்று எம்.ஜி.ஆர். தங்கப்பதக்கம் அளித்த பத்து கவிஞர்களில் அம்பியும் ஒருவர்.

30 ஆண்டுகள் ஆசிரியப்பணி, பின்னர் பாட விதான எழுத்தாளர் என்று அவரின் பணி விரிகிறது. இளங் குழந்தைகளின் வயது, மூளை வளர்ச்சி, மொழித்திறன் ஆற்றல், ஏற்புடைமை இவற்றை யெல்லாம் கவனத்தில் கொண்டு சீரிய பாடல்களை எழுதிய பெருமை கவிஞர் அம்பிக்குரியது.



# பெட்ரோலியத்துக்கு உலகளாவிய தேவைகள் குறைந்து வருகின்றன!

## சர்வதேச எரிசக்தி நிறுவனம் தெரிவிப்பு

பெட்ரோலியத்துக்கான உலகளாவிய தேவையின் வளர்ச்சி குறைந்துள்ளது என்று சர்வதேச எரிசக்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒபெக் அமைப்புக்கு வெளியே உள்ள நாடுகளின் உற்பத்தி அதிகரிப்பால் எண்ணெய் உபரி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில், உலகளாவிய எரிபொருள் நுகர்வு சுமார் 35 வீதம் குறைந்துள்ளது என்று சர்வதேச எரிசக்தி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட மந்த நிலையே இந்த விலகலுக்கு முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றது.

சர்வதேச எரிசக்தி முகவரின் கூற்றுப்படி, 2024 ஆம் ஆண்டு முழுவதும் உலகளாவிய எரிபொருள் தேவை ஒரு நாளைக்கு 1.2 மில்லியன் பீப்பாய்கள் அதிகரிக்கும். இது கடந்த ஆண்டு வளர்ச்சியில் அரைவாசியே என்று சர்வதேச எரிசக்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒபெக் பிளஸ் கூட்டணிக்கு வெளியே உள்ள நாடுகளில் எண்ணெய் உற்பத்தி நாளொன்றுக்கு சுமார் 1.6 மில்லியன் பீப்பாய்கள் அதிகரித்துள்ளன.

இந்தச் சூழ்நிலையின் அடிப்படையில், 2024 முழுவதும் உலகளாவிய எண்ணெய் விலை நிலையானதாக இருக்கும் என்று சர்வதேச எரிசக்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.



# மதுபான உற்பத்தி வீழ்ச்சி நிலையில்!

இலங்கையில் மதுபான உற்பத்தியில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று நிதி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அரச நிதி முகாமைத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் மதுபான உற்பத்தி 13.4 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் குறித்த காலப் பகுதியில் நாட்டின் மொத்த மதுபான உற்பத்தி 31.2 மில்லியன் லீற்றர் எனவும், கடந்த 2023 ஆம் ஆண்டில் இந்த தொகை 27 மில்லியன் லீற்றர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2023 ஆம் ஆண்டில் நாட்டின் மதுவரி வருமானம் சிறிதளவு வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தில் 58 வீதம் கிடைக்கப்பெற்றுள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.



# பிறந்து 9 நாள்களேயான குழந்தையை விற்க முயன்றுள்ள இளம் தாய் கைது!

மினுவாங்கொடை பிரதேசத்தில் பிறந்து 9 நாள்களேயான குழந்தையை வேறு தரப்பினருக்கு சட்ட விரோதமான முறையில் விற்க முயன்ற பெண் ஒருவர் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானப்படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகளால் இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

28 வயதுடைய சந்தேக நபரான பெண் குழந்தையின் தாய் எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன், அவர் குழந்தையை 3லட்சத்து 60 ஆயிரம் ரூபாவுக்கு விற்கத் திட்டமிட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மினுவாங்கொடை, பன்சில்கொட பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், மேலதிக விசாரணைகளுக்காக மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்புக் கூட்டம்



**(கே. எ. ஹமீட்)**

நிந்தவூர் அமைந்துள்ள 19, 20, 25 கிராம சேவகர் பிரிவுகளுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை அரசியல் அதி உயர் பீடஉறுப்பினர் எம்.ரீ. சப்ராஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸ் பொருளாளரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பைசல் காசீம், பிரதி தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், அரசியல் அதி உயர் பீட உறுப்பினரும், நிந்தவூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான ஏ.எல்.எம் நஜீம், நிந்தவூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.அன்ஸார், நாடாளுமன்ற உறுப்பினர் இணைப்புச் செயலாளர் ஏ.எம்.அஸ்லம் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கல்



**(எஸ். சினீஸ் கான்)**

குறிஞ்சாக்கேணி மாகாத் நகர் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கின் கோரிக்கைக்கு அமைவாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடைய பரித்துரையில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

எல்.ஐ.ஓ.சி. நிறுனத்தின் அனுசரனையில் நிவாரண உதவிகள் தௌபீக் எம்.பியால் நேற்று சனிக்கிழமை (17) வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் எல்.ஐ.ஓ.சி. நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தீபக் தாஸ், கிண்ணியா பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்களான ஜவாதுல்லா, சனூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# மன்னாரில் அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கு வலுவூட்டல் நிகழ்வு

(மன்னார் நிருபர்)

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பெண்கள் குழுக்களின் ஏற்பாட்டில், மன்னாரில் ஐந்து பிரதேச செயல கங்களை உள்ளடக்கி அரசியலில் ஈடுபடும் மற்றும் அரசியலில் ஈடுபட காத்திருக்கும் பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்வு மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்று (17) இடம்பெற்றது.

சிறப்பு வளவாளராக ஓய்வு பெற்ற மன்னார் மாவட்ட முன்னாள் அரச அதிபர் திருமதி ஸ்டாலின் டிமேல் கலந்து கொண்டார்.



இதன் போது மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயல கங்களை உள்ளடக்கி முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளடங்களாக 45 இற்கும் மேற்பட்ட பெண்கள் பங்கு பற்றினர்.

எதிர் காலத்தில் அரசியலில் பெண் களின் வகிபங்கு தொடர்பாகவும் இலங்கை அரசியல் உரிமைகள் தொடர்பாகவும் பெண்களின் சமத்துவம் தொடர்பாகவும் பல்வேறு விடயங்கள் இந்தச் செயலமர்வில் தெளிவுபடுத் தப்பட்டன.

# வவுனியாவில் குளங்களில் இறால் குஞ்சுகள் விடப்பட்டன!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வவுனியா ஆசிக்குளம் கிராம சேவ கர் பிரிவிலுள்ள 6 குளங்களில் 2 லட் சத்து 35 ஆயிரம் இறால் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு அண் மையில் இடம்பெற்றது.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சால் முன்னெடுக்கப்படும் சிறி தளவிலான விவசாய மற்றும் வணிக மீண்டெழும் திட்டத்தின் அடிப்படை யில் முதலாவது நிழ்வு குமரன் குளத் தில் இடம்பெற்றது. இங்கு 50 ஆயி ரம் இறால் குஞ்சுகள் விடப்பட்டன.

இந்தத் திட்டத்தின் இணைப்பாளர் எஸ்.எச்.ஏ.அஸ்றப் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர , மேலதிக அரச அதிபர் ரீ.திரேஸ்குமார், மாவட்ட விவசாய பணிப்பாளர் திரு மதி ஈஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் வீ.முகுந்தன், மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் அற்பு தச் சந்திரன், தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை யின் அதிகாரி யோ.நிசாந்தன் உட்பட பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# தரம் 5 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு



(எஸ். சினீஸ் கான்)

ஆலையடிவேம்பு பிரதேசத்துக்கு உட்பட்ட அன்னை சாரதா வித்தியால யத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் (2023) சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி கோமளம் துளசிநாதன் தலைமையில் வெள்ளிக் கிழமை (16) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை பணிப்பாளர் சபை உறுப்பினர் பியசேன கிருத்திகன் கலந்துகொண் டார்.

ஆலையடிவேம்பு பிரதேச கோட்டக்-கல்வி பணிப்பாளர், திருக்கோவில் வலய ஆசிரியர் வள முகாமையாளர் உட்பட அதிகள் கலந்து கொண்டு சித்தி யடைந்த மாணவர்களைக் கௌர வித்துப் பரிசுப் பொதிகளையும் வழங்கி னர்.



(எஸ். சினீஸ் கான், எம்.எப்.நவாஸ்)

மூதூர் புர்க்கானியா வித்தியால யத்தின் 2023 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் கௌரவிப்பும் பாடசாலை யின் அதிபர் இம்ரான் தலைமை யில் சனிக்கிழமை (17) நடைபெற் றன.

நிகழ்வின் பிரதம அதிதியாக திரு கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் கலந்து கொண்டார். வலயக்கல்வி பணி மனையின் உத்தியோகத்தர்கள், ஆசி ரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகளும் கலந்து கொண்ட னர்.

# மகனின் பிரிவைத் தாங்க முடியாத தந்தை எடுத்துள்ள தவறான முடிவு!

அனுராதபுரத்தில் மகன் திடீரென உயிரிழந்தமையை தாக்க முடியாத தந்தை உயிரை மாய்க்க முயற்சித்துள்ளார்.

எப்பாவல, கட்டியாவ பகுதியைச் சேர்ந்த 34 வயது ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் மரணமடைந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி அந்த இளைஞன் தனது வீட்டின் முன் விழுந்து கிடந்த நிலையில், அவரது இளைய சகோதரர் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர், அந்த வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

அவரது மரணத்தால் அவரது தந்தையும் மனம் உடைந்து விஷம் அருந்திய நிலையில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இறந்த நபர் தாக்கப்பட்டரா?, அல்லது அவரது உடலை வளர்க்க பயன்படுத்திய ஊக்க மருந்துகளால் பாதிப்பு ஏற்பட்டதா? அல்லது வேறு ஏதேனும் உடல் நிலை உபாதை காரணமாக இந்த மரணம் ஏற்பட்டதா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# நோயாளிகளால் நிரம்பி வழியும் சிறைச்சாலை வைத்தியசாலை!

## சிறைச்சாலை புனர்வாழ்வு ஆணையாளர் காமினி திஸாநாயக்க தெரிவிப்பு

சிறைச்சாலை வைத்தியசாலை நிரம்பி வழிகிறது என்று சிறைச்சாலை புனர்வாழ்வு ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான காமினி திஸாநாயக்க தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் நோய்வாய்ப்பட்ட 180 கைதிகளுக்கான வசிப்பிட வசதிகளை வழங்கும் திறன் இருந்தாலும், அந்த எண்ணிக்கை தற்போது 380 ஆக உயர்ந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

சில சமயங்களில் நோயாளர்களின் அதிகரித்த எண்ணிக்கை காரணமாக ஒரு படுக்கையில் இரு நோயாளிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோய்வாய்ப்பட்ட கைதிகள் மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகே சிறைக்கு அனுப்பப்படுகின்றனர். அதற்கேற்ப நோயாளிகளின் எண்ணிக்கை குறையும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, நீதிமன்ற தீர்ப்பால் மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா கடந்த வெள்ளிக்கிழமை ஜயவர்தனபுர வைத்தியசாலையில் இருந்து சிறைச்சாலை வைத்தியசாலைக்கு ஜனவரி 19ஆம் திகதி அழைத்து வரப்பட்டார் என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

தற்போது நாடளாவிய ரீதியில் உள்ள 28 சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 33 ஆயிரம் ஆகும். சிறைச்சாலைகளின் இடத்தை அதிகரிக்கும் வகையில் தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ள பல கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன என்றும் காமினி திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு; தேர்தல் ஆணைக்குழு விடுத்தது!

எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழு, அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளது.

இதன்படி, பதிவு செய்யப்பட்டுள்ள 80 அரசியல் கட்சிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் தேர்தல் ஆணைக்குழு தலைவரை அடுத்த வாரம் சந்திக்க உள்ளனர்.

இந்த ஆண்டு ஒக்ரோம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்த வேண்டியுள்ளது.




இந்த நிலையில் இந்தக் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள், வாக்காளர் பதிவு தொடர்பிலான பிரச்சினைகள் குறித்தும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்தச் சந்திப்பு எதிர்வரும் 27 ஆம் திகதி அல்லது மார்ச் மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



# மன்னாரில் அழகு நிறைந்த பிளமிங்கோ பறவையினம்

(ஹஸ்பர்)

புலம்பெயர்ந்த பறவைகள் பிளமிங் கோக்கள் மன்னார் பகுதியில் காணப்ப டுகின்றன. இங்கு உணவு கிடைப்பது, வானிலை மற்றும் இனப்பெருக்க ஜோடி களைத் தேர்ந்தெடுப்பது உள்ளிட்ட பல காரணங்களால் இந்தப் பறவைகள் புலம்பெயர்ந்து வந்துள்ளன.

இந்த இடம்பெயர்ந்த பறவைகளுக் குள், மிகவும் அரிதான மற்றும் மிகவும் உணர்திறன் கொண்ட பறவை ஃ பிளமிங்கோ ஆகும். தற்போது அவை அனைத்தும் மன்னாரில் குவிந்துள்ளன.

இந்தப் பறவைகள் மன்னாரின் ஈரநிலங்களில் ஐந்து மாதங்களுக்கும் மேலாக செலவழிக்கும். அழகான மற்றும் கம்பீரமான பிளமிங்கோக்களை ஓய்வு நேரத்தில் பார்க்க முடிகிறது.

இந்தவகைப் பறவைகள் நவம்பரில் மாதம் வந்து, பொதுவாக ஏப்ரல்வரை இருக்கும். அவர்கள் இலங்கைக்கு இடம்பெயர்வது மட்டுமன்றி, பாகிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கும் புலம்பெயர்கின்றனர்.





# ஐந்து மாத காலத்தில் மக்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டு வழங்கல்

(நூருல் ஹுதா உமர்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் திருக்கோயில் பிர தேசத்தை சேர்ந்த மக்களுக்கு ஐந்து மாத காலத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுக் கைய ளிக்கப்பட்டன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தை சேர்ந்த மக்கள் யுத்தத்தால் பாதிக்கப் பட்டு , வீடுகள் இன்றி இன்னல்களுக்கு முகம் கொடுத்து வந்த நிலையில், இவ்விடயம் தொடர்பாக அம்பாறை மாவட்ட அரச அதிபர், திருக்கோவில் பிரதேச செயலாளர், அரச உத்தி யோகஸ்தர்கள் மற்றும் பொது மக்களால் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.



ஆளுநர் செந்தில் தொண்டமான் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு, மக்களின் குறைகளை கேட்டறிந்து மக்களின் கோரிக்கையை ஏற்று ஐந்து மாதக் காலத்துக்குள் அவர்களுக்கான வீடுகளை நிர்மாணித்து அந்த மக்களிடம் கையளித்துள்ளார்.

திருக்கோயில் மாவட்ட மக்கள் தங்களது கோரிக்கையை குறுகிய காலத்தில் நிறைவேற்றியமைக்காக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் திருக்கோவில் பிரதேச செயலாளருக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த உதவியும் நிகழ்வும்

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வுகள் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இறை வணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் சைவப் புலவர் திருமதி அண்முகவடிவு தில்லைமணியால் குமர குருபரர் சுவாமிகள் பற்றிய ஆன்மீக அருளுரை வழங் கப்பட்டது.

தொடர்ந்து வாராந்த உதவிகளாக ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் – 01 வகுப்பில் புதிதாக இணைந்த 16 மாணவர்களுக்கு காலணிகளை பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை முதல்வர் சி.மதிபாலனிடம் 40 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

புத்தளம் – சேனைக்குடியிருப்பு ஸ்ரீ பத்தினி அம்மன் அறநெறிப் பாடசாலைக் கட்டட நிர்மானத்துக்கு ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.



இதில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், நலன் விரும்பிகள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், அடியார்கள் கலந்து கொண்டனர்.

# ஒல்லாந்தர் கோட்டையை அழகுபடுத்தும் படையினர்

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனின் வழிகாட் டுதலின் கீழ் 243 ஆம் படைப்பிரின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சன்டிம குமாரசிங்கவின் மேற்பார்வையில் 243 படைப்பிரிவினரால் ஒல்லாந்தர் கோட் டையை அழகுபடுத்தும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.



அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் தளமாகக் காணப்படுவ தனால, மாவட்டத்தின் புராதன ஒல்லாந்தர் கோட்டையை அழகு படுத்திச் சுற்றுலாப் பயணிகளை கவரும் இடமாக வேலைகள் இடம்பெற்று வருகின்றன.



243 ஆவது படைப் பிரிவினரால் கல்லடிப் பாலத்தின் அருகில் காணப்பட்ட பற்றைகளை அகற்றி அழகு படுத்தும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது.



# இலங்கையில் அரசியல், சமூக, பொருளாதார மாற்றத்தைப் பெரிய அளவில் ஏற்படுத்துவோம்

**மவ்பிம ஜனதா கட்சியின் தலைவரும் தொழிலதிபருமான திலித் ஜயவீர உறுதி!**

இலங்கையில் அரசியல், சமூக, பொருளாதார மாற்றத்தைப் பெரிய அளவில் ஏற்படுத்துவோம் என்று மவ்பிம ஜனதா கட்சியின் தலைவரும் தொழிலதிபருமான திலித் ஜயவீர உறுதி தெரிவித்துள்ளார்.

ஆயிரக் கணக்கான ஆதரவாளர்கள் முன்னிலையில் கொழும்பு மாவட்ட மாநாட்டில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சியின் கொழும்பு மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய திலித் ஜயவீர , நாட்டுக்கு புதிய அரசியல் கலாசாரமொன்றின் தேவை குறித்தும் வலியுறுத்தினார்.

மகிழ்ச்சியான உலகை உருவாக்கும் தொழில் முனைவோர் அரசைக் கட்டியெழுப்பும் இந்த மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுச் சனிக்கிழமை (17)நடைபெற்றது.

கடந்த சில மாதங்களில் பல மாவட்ட மாநாடுகள் நடைபெற்ற போதிலும் , இந்த மாநாட்டுக்கு அதிக சனத்திரள் காணப்பட்டது.

அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றிய திலித் ஜயவீர மேலும் தெரிவிக்கையில்,

நான் அரசியலுக்கு வர எதிர்பார்த்தவன் அல்ல . தயக்கத்துடன், ஆனால் விருப்பத்துடன், கால காலமாக அரசியல் ஓட்டத்தைப் பொறுத்து நாங்கள் வெவ்வேறு நபர்களை ஆதரித்தோம். ஆனால் இப்போது உங்களுக்காக, நாட்டுக்காக, இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினருக்காக இந்தப் பயணத்தை மேற்கொள்கிறேன்.

நம்பிக்கையின் அடிப்படையில் நாங்கள் முன்பு பல தரப்புகளை ஆதரித்தோம். அது வேறொன்றுமில்லை. என்றாவது ஒரு நாள் இந்த இலங்கையை கட்டியெழுப்பலாம், வளர்ந்த நாடாக மாற்றலாம் என்ற ஆசைதான் அது .

ஆனால் இலங்கையில் தீர்க்கமான அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் தற்போது மவ்பிம ஜனதா கட்சி மற்றும் அந்த அமைப்பின் இளையோர் மூத்த தலைவர்களுடன் இணைந்து செயற்படுகின்றோம். இந்த நாடு இப்போது மிகவும் சோர்வாக இருப்பதாக உணர்கிறோம். மிகவும் கடினம். 75 வருடங்களாக இந்த நாடு கொள்கை இல்லாத அரசியல் செய்து வருகிறது என்பது உங்களுக்கு மிகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

உங்கள் அனைவரின் வாழ்விலும் உடனடி மாற்றத்தை ஏற்படுத்தும் புரட்சிகரமான மாற்றம் இந்த நாட்டுக்குத் தேவை. நாங்கள் செய்த முக்கிய தவறு என்னவென்றால், நாங்கள் எப்போதும் மற்றொரு அரசைக் கவிழ்க்க புதிய அரசுகளைக் கொண்டு வந்தோம். அல்லது வேறொரு அரசின் தவறுகளை சுட்டிக்காட்டுவது எமது பணியாக இருந்தது. ஆனால் உலகில் உள்ள அனைத்து வளர்ந்த நாடுகளும் பயன்படுத்தும் தொழில்முனைவோர் ஊக்குவிப்பு திட்டத்துடன் நாங்கள் வருகிறோம். அது நாட்டையும் உங்களையும் முன்னோக்கி நகர்த்தும் வாழ்க்கையை உருவாக்குகிறது என்ற கருத்துடன் நாங்கள் வருகிறோம். இந்த நாடு பின்னடைந்து நிற்கும் நாடு அல்ல. இது ஒரு விஞ்ஞான மற்றும் நடைமுறை திட்டமாகும், இது உங்கள் வாழ்க்கையின் முன்னேற்ற நிலையை இது விரைவாக மேம்படுத்தும்.

இந்த நாட்டின் அனைத்து படைப்பாற்றல் மிக்கவர்களும் ஒன்றிணைந்து முன்னேற வேண்டும்.எங்களிடம் எப்போதும் இருந்த தன்னம்பிக்கை , தைரியம் மற்றும் படைப்பாற்றலுடன் முன்னேற்றத்துக்கான பயணத்தை இலங்கையர்களாகிய நாங்கள் மேற்கொள்ள வேண்டும். துக்கம் அனுசரிக்க புலம்புவதற்காக நாங்கள் மக்களை ஒன்று சேர்க்கவில்லை. புலம்பல்களை கேட்கவோ அல்லது சேற்றை சுவைக்கவோ மக்கள் நம்மைச் சுற்றி கூடுவதில்லை. இது உங்கள் வாழ்க்கையை மாற்றும் திகதிகளுடன் திட்டமிடப்பட்ட அட்டவணை. அந்த நடைமுறையில் நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறீர்கள். கொழும்பில் உள்ளவர்களைப் போன்று, நிற, கட்சி, மத, இன வேறுபாடின்றி அனைத்து இலங்கையர்களும் இந்தத் திட்டத்தில் இணைவார்கள் என நம்புகிறோம். மறுக்க முடியாத வெற்றியுடன் இந்த நாட்டை கட்டியெழுப்பக்கூடிய ஒரே வகையான மற்றும் கௌரவமான தீர்வு இதுதான் என்பதை இன்றைய இந்த நிகழ்ச்சி நிரூபிக்கிறது. சரியான நேரத்தில் அதை உங்களுக்கு வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

எங்கள் அணுகுமுறையைப் பாருங்கள். நாங்கள் இந்த பாரம்பரிய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதன் அர்த்தம் இந்த இருநூற்றி இருபத்தைந்தும் வேண்டாம் என்பதல்ல. அவர்கள் சேரக் கூடிய இடம் இருந்தால், எங்கள் கொள்கையுடன் உடன்பட்டால் அவர்கள் எங்களது வரிசையில் சேரலாம் என்று நினைக்கிறேன். நாங்கள் எப்படி ஒன்றாக பயணிக்கலாம் என்று பார்ப்போம். நாம் மற்ற பாரம்பரிய அரசியல் கட்சிகளை ஆதரிக்கிறோம் என்பதல்ல நண்பர்களே. எங்களுக்கு அத்தகைய நம்பிக்கை இல்லை. இத்திட்டம் நமது தாய்நாட்டை மாற்றும் திட்டமாகும். பின்னர் யார் வேண்டுமானாலும் சேரலாம். ஆனால் நேர்மையான இதயத்துடன் மட்டுமே அவர்கள் எங்களுடன் சேர வேண்டும்.

தனிப்பட்ட முறையில் திலித் ஜயவீரவும் மவ்பிம ஜனதா கட்சியும் நாட்டு மக்களிடம் இருந்து எதையும் எதிர்பார்க்கும் குழு அல்ல. எனவே நீங்கள் எங்களை நம்பலாம். இந்த இலங்கை அரசியலில் 75 வருடங்களாக தொடர்ந்து சீரழிக்கப்பட்ட அரசியலுக்கு முடிவு கட்டுவோம்.-என்றார்.

# களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் ரன்விமன வீடு பயனாளியிடம்!

(பழுவூரான்)

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தின் குருமண்வெளி -11, மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைக்கப்பட்ட ரன்விமன வீடு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தால் பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை சமூக ரீதியாக மேலுயர்த்துவது மற்றும் வீடற்றவர்களுக்கு வீடு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட ரன்விமன வீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் திருமதி கருணாகரமூர்த்தி ராதிகாவுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. பயனாளியின் பங்களிப்பாக ரூபா 17 லட்சம் ரூபாவும் சேர்த்து இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.



வீடு கையளிக்கும் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்திய கௌரி தரணிதரன், தலைமையக முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார், கருத்திட்ட முகாமையாளர் திருமதி விமலராணி யோகேந்திரன், எருவில் வங்கி முகாமையாளர் எஸ். ஆனந்தமோகன், சமூக அபிவிருத்தி உதவியாளர் தெ.உதயசுதன், கிராம சேவை உத்தியோகத்தர் திருமதி நிரோசினி பிரசாந்த, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பே.அச்சுதன், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி மதனப்பிரியா சுந்தரலிங்கம், எஸ்.ஜெயகாந்தன், அலுவலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பு உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆலய நிர்வாகிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# கல்முனையில் டெங்கு ஒழிப்பு!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் சமூகப் பணியைத் தொடர்ச்சியாக மக்களுக்கு கொண்டு செல்லும் நோக்கில் பல்வேறு பணிகளை மேற்கொண்டுவரும் ஏ. ஆர்.மன்சூர் பவுண்டேஷன் அமைப்பின் ஏற்பாட்டில் கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்பாக உள்ள கடற்கரை பகுதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

அமைப்பின் தலைவி முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூரின் புதல்வி திருமதி மரியம் நளீமுத்தீன் தலைமையில் நேற்று இந்தச் செயற்பாடு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் பிரதம பொறியியலாளர் கே.ஜெளஸி உட்பட ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபையினர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அமைப்பின் உறுப்பினர்கள், பிரதேச மக்கள், மீனவர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கல்முனை மாநகர சபையின் கனரக இயந்திரங்களை கொண்டு இந்தப் பகுதியில், நீண்ட காலமாக துப்புரவு செய்யப்படாமல் இருந்த பிரதான வடிகான் துப்புரவு செய்யப்பட்டு கழிவுகள் அகற்றப்பட்டன. கடற்கரைப் பகுதிகளில் கிடந்த பிளாஸ்டிக் போத்தல்கள், குப்பைகள் போன்றவையும் அங்கிருந்து அகற்றப்பட்டன.

அங்கு பொது மக்களுக்கு நேரடியாகச் சென்று விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டன.

எதிர்காலத்தில் இந்தக் கடற்கரைப் பகுதியில் மரம் நடுகை செய்யப்படவுள்ளது என்று ஏ.ஆர். மன்சூர் பௌண்டேஷனின் தலைவி இங்கு தெரிவித்தார்.




# ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவர் உடலை தாயாரிடம் வழங்க அதிகாரிகள் தயக்கம்!

## தடயங்களை மறைக்க முயற்சி என்று அவரது நண்பர் குற்றச்சாட்டு

ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸே நவல்னி கடந்த 16 ஆம் திகதி சிறையில் உயிரிழந்துள்ளார். இந்த நிலையில் உடலை அவரது தாயரிடம் கையளிப்பதற்கு ரஷ்ய அதிகாரிகள் மறுக்கின்றனர் என்று நவால்னியின் நெருங்கிய நண்பரொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரேத பரிசோதனை முடிவடைந்த பின்னரே உடலை கையளிப்போம் என ரஷ்ய அதிகாரிகள் நவால்னியின் தயாரிடம் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலையில் நடந்து கொண்டிருந்தவேளை தீடிரென மயக்கமடைந்து வீழ்ந்து நவால்னி உயிரிழந்தார் என்று ரஷ்ய அதிகாரிகள் அவரின் தாயாரிடம் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் திடீர் இறப்புக்கான நோய் அறிகுறி காணப்பட்டுள்ளது என்று ரஷ்ய அதிகாரிகள் நவால்னியின் தாயாரிடம் தெரிவித்துள்ளனர். எனினும் இது ஒரு தெளிவற்ற பொதுவான விளக்கம் என குறிப்பிடப்படுகின்றது.

சிறைச்சாலைக்கு அருகில் உள்ள நகரம் ஒன்றுக்கு நவால்னியின் உடல் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தாயாருக்கு தெரிவித்தனர். எனினும் அவர் அங்கு சென்றவேளை பிரேத அறை மூடப்பட்டிருந்தது என்று நவால்னியின் நண்பர்கள் தெரிவிக்கின்றனர்.

முதலாவது பிரேத பரிசோதனை முழுமையானதாக



காணப்படாததால் மற்றுமொரு பிரேத பரிசோதனையை மேற்கொள்ளவேண்டியுள்ளது என ரஷ்ய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தடயங்களை மறைப்பதற்காக வேண்டுமென்றே நவால்னியின் உடலை அதிகாரிகள் மறைக்கின்றனர் என தெரிவித்துள்ள நவால்னியின் நண்பர்கள் அவரது உடலை உடனடியாக குடும்பத்தினரிடம் வழங்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சித்திரவதை செய்யப்படுகின்றனர் கைது செய்யப்பட்ட காசா மக்கள்!

## குற்றஞ்சாட்டியுள்ளது பாலஸ்தீன அமைப்பு ஒன்று!!

இஸ்ரேல் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ள காசா மக்கள் சித்திர வதை செய்யப்படுகின்றனர் என்று பாலஸ்தீன அமைப்பு ஒன்று குற்றஞ்சாட் டியுள்ளது. அந்த அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டதன் மூலம் இத னைத் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில்,

இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு காசா ஆளாகிவரும் சூழலில் இஸ்ரே லால் கைது செய்யப்பட்ட காசா மக்கள் மீது கொடூரமான குற்றங்கள் நடக்கின்றன.

இஸ்ரேலின் முன்னாள் கைதிகளிட மிருந்து பெறப்படும் தகவலின்படி, அவர்கள் கைதிகளைச் சித்திரவதை செய்கின்றனர் என்பது உறுதி செய் யப்பட்டுள்ளது.

இங்கு கைதிகள் எனக் குறிப்பிடப்படு பவர்களில், பெண்களும், குழந்தைக ளும், மருத்துவர்களும் கூட அடங்குவர். கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான எந்தத் தகவல்களையும் அளிக்க இஸ்ரேல் அதிகாரிகள் மறுக்கின்றனர்.- என்றுள்ளது.






# ஹமாஸ் பயங்கரவாத குழு இல்லை என்ற கருத்துக்கு இஸ்ரேல் கண்டனம் வெளியீடு!

ஹமாஸ் அமைப்பு ஒரு பயங்கரவாத குழு இல்லை, அது ஒரு அரசியல் இயக்கம் என்று ஐ.நாவின் மனிதாபிமான விவகாரம் மற்றும் அவசரகால நிவாரண ஒருங்கிணைப்பாளரான மார்ட்டின் கிரிபித்ஸ் கூறிய கருத்துக்குக் கடும் எதிர்ப்புகளையும் கண்டனங்களையும் இஸ்ரேல் வெளியிட்டுள்ளது.

ஹமாஸின் பிடியில் உள்ள 134 பேரில் 31 பேர் உயிரிழந்து விட்டனர் என்று இஸ்ரேல் அண்மையில் அறிவித்தது. இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே மார்ட்டின் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

அவரது இந்தக் கருத்துக்கு இஸ்ரேலின் வெளியுறவுத்துறை அமைச்சர் கண்டனம் தெரிவித்துள்ளது. அத்துடன் ஐ.நா. அமைப்பு ஒவ்வொரு நாளும் தரம் குறைந்து வருகிறது என்றும் ஹமாஸ் ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற உண்மையை ஐ.நா. அதிகாரி மறுக்கிறார் எனவும் தெரிவித்தார்.

ஹமாஸை ஓர் அரசியல் இயக்கம் என அழைக்கும் ஐ.நாவின் பொது செயலாளர் அன்டனியோ குட்றஸும் ஒன்றும் தெரியாதவர் போன்று தொடர்ந்து பாசாங்கு செய்து வருகிறார் எனவும் சாடினார்.

ஹமாசை நாங்கள் ஒழிப்போம், யூதர்களின் ரத்தம் மலிவானதல்ல என்பதை அனைவரும் அறியச்செய்யவோம் என இஸ்ரேலின் வெளியுறவுத்துறை அமைச்சர் சீற்றம் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் எர்டான் கூறும்போது, நூற்றுக் கணக்கான குடிமக்களை கொடூர கொலை செய்தது பயங்கரம் இல்லையா? பெண்களை திட்டமிட்டு பலாத்காரம் செய்தது பயங்கரம் இல்லையா? யூத படுகொலை முயற்சி பயங்கரம் இல்லையா? என கேள்வி எழுப்பியுள்ளதுடன், கிரிபித்சை ஒரு பயங்கரவாத கூட்டாளி எனவும் கூறினார். ஹமாஸிற்கு ஆதரவாக ஐ.நா. தரப்பில் கூறப்பட்ட கருதத்துக்கு இஸ் ரேல் கடும் கண்டனங்களை ஐ.நாவுக்கு எதிராக தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்; ஒப்புதல் அளித்துள்ளது பிரான்ஸ்!



உக்ரைனுடன் புதிய நீண்டகால பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றுக்கு பிரான்ஸ் நேற்று ஒப்புதல் அளித்துள்ளது.

அந்த ஒப்பந்தத்தில், உக்ரைனுக்குப் போரிட தேவையான கூடுதல் ஆயுதங் களை வழங்குதல் மற்றும் உக்ரைனிய வீரர்களுக்கு பயிற்சி அளிப்பது மற்றும் 26,805 கோடி ரூபா மதிப்பான இராணுவ உதவியை அனுப்பி வைப்பது உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன.

அத்தோடு, இந்த ஒப்பந்தமானது, 10 ஆண்டுகள் நீடிக்கவுள்ளது. அத்துடன் இராணுவத் துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதுடன், வருங் காலத்தில், ஐரோப்பிய யூனியன் மற்றும் நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கான வழியையும் ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மற்றும் பிரான்ஸ் நாடுகளின் அதிபர்களான ஜெலன்ஸ்கி மற்றும் மேக்ரான் இருவரும் அது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, ஏற்கனவே இது போன்ற ஒப்பந்தம் ஒன்றை ஜேர்மனியுடன் உக்ரைன் ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




### போர் ஆரம்பித்து இரண்டு வருடங்கள் நிறைவில்

# உக்ரைன் கிழக்குப் பகுதிகளை நேற்றுக் கைப்பற்றியது ரஷ்யா!

கிழக்கு உக்ரைனின் டொனட்ஸ்க் பகுதியில் அமைந்துள்ள அவ்டீவ்கா நகரை ரஷ்யப் படையினர் நேற்றுச் சனிக்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்துச் சில நாள்களில் 2 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் அந்த நாட்டுக்குக் கிடைத்துள்ள வெற்றி, ரஷ்ய படையினருக்கு உற்சாகத்தை அளிக்கும் என்று கருதப்படுகிறது.

இந்த ஆக்கிரமிப்பு குறித்து உக்ரைன் தளபதி ஒலெக்ஸாண்டர் சிர்ஸ்கி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ரஷ்ய படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்து அவ்டீவ்கா நகரைப் பாதுகாத்து வந்த உக்ரைன் படையினர், அந்த நகரிலிருந்து திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர்.

ரஷ்ய ராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டு, அதன் விளைவாக உக்ரைன் வீரர்களின் உயிருக்கும், உடல்நலனுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைக்கேற்ற சாதகமான நிலைகளில் உக்ரைன் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். அவ்டீவ்கா நகரில் நமது படையினர் கௌரவத்துடன் சண்டையிட்டு தங்களால் முடிந்த அளவுக்கு ரஷ்ய படையினருக்கு இழப்பை ஏற்படுத்தினோம்.

ஏற்கெனவே, ரஷ்ய படையால் முற்றுகையிடப்பட்டிருந்த பாக்முத் நகரைப் பாதுகாப்பதற்காக அங்கு தொடர்ந்து 9 மாதங்களாக வீரர்களை நிறுத்திச் சண்டை இடம்பெற்றது.

உக்ரைன் போரில் மிக நீண்டதும், மிக அதிகமான எண்ணிக்கையில் உயிரிழப்புகளையும் அந்தச் சண்டை ஏற்படுத்தியது. எனினும், இறுதியில் பாக்முத் நகரை ரஷ்யாவிடம் உக்ரைன் இழந்தது.-என்றுள்ளது.

இந்த விவகாரத்தால் ஒலெக்ஸாண்டர் சிர்ஸ்கியின் போர் உத்தி விமர்சனத்துக்குள்ளானது.

இந்தச் சூழலில், கடந்த 4 மாதங்களாக அவ்டீவ்கா நகரைக் கைப்பற்றுவதற்காக ரஷ்யப் படையினர் அந்த நகரைச் சுற்றிவளைத்தனர்.

நகரைப் பாதுகாப்பதற்காக நிறுத்தப்பட்டுள்ள உக்ரைன் வீரர்களைவிட அதிக எண்ணிக்கையில் அங்கு ரஷ்ய படையினர் குவிக்கப்பட்டனர்.

நகரைப் பாதுகாப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்த உக்ரைன் படையினருக்கு உணவு, ஆயுதங்கள் வருவதற்கான வழித்தடங்களையும் ரஷ்ய ராணுவம் துண்டித்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, அவ்டீவ்கா நகரம் வீழ்வது உறுதியான நிலையில் அங்கிருந்து வீரர்களை உக்ரைன் ராணுவம் திரும்ப அழைத்துள்ளது.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி படையெடுத்து, டொனட்ஸ்க் உள்ளிட்ட கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைன் பிராந்தியங்களில் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியது. இருந்தாலும், கடந்த சில மாதங்களாக போரில் எந்த முன்னேற்றமும் ஏற்படாமல் இருந்தது.

இந்த நிலையில், போர் தொடங்கி 2 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் அவ்டீவ்கா நகரம் ரஷ்யாவிடம் வீழ்ந்துள்ளமை மீண்டும் போர் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈழத் தமிழர் விவகாரத்தில் மாற்றம்; விஜய் கொண்டுவருவது சாத்தியம்!

## இந்தியா அரசியல் ஆய்வாளர் இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு



ஈழத் தமிழர் விவகாரத்தில் மாற்றங்கள் செய்யக் கூடிய இடத்தில் விஜய் இருக்கிறார் என்று இந்தியாவின் மூத்த ஊடகவியலாளரும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி இராதாகிருஸ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

நடிகர் விஜய்யின் அரசியல் பிரவேசம் தொடர்பில் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

என்னைப் பொறுத்தவரையில், நடிகர் விஜய் அரசியல் உள்நுழைவதற்கான முடிவை எடுப்பதற்குத் தள்ளப்பட்டார். கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் விஜய் அரசியலில் நுழைந்திருக்க வேண்டும். விஜய் அரசியலுக்கு வர முக்கிய காரணங்கள் இருக்கின்றன.

விஜய்க்கு இரண்டு இடங்களில் இருந்து அழுத்தங்கள் வந்தன. மத்தியில் பா.ஜ.கவில் இருந்து விஜய்க்கு அழுத்தம் வந்தது. அதேபோன்று இங்கே தமிழகத்திலும் அவர் மீது பாரிய அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

தி.மு.கவில் இளைய வாரிசு என்று திடீரென்று உதயநிதியை கொண்டு வந்து எதிர்கால முதல்வர் என்ற விம்பத்தை உருவாக்கி செயற்பட்டு கொண்டிருக்கின்றனர். அவர் கிட்டத்தட்ட சினிமாவின் முழு கட்டுப்பாட்டையும் தன்னகத்தே கொண்டிருப்பதாக தெரிகிறது. அவரும் நடிகராக இருந்தவர்.

அவருக்கு இந்த விடயங்கள் தெரியும். சினிமாவில் இருக்கும் சகல பிரச்சினைகளையும் ஏறத்தாழ அவர் தான் கையாளுகின்றார் என்று தெரிகின்றது.

இதில் விஜய்யின் படங்களும் உட்படுகின்றன. மிகப் பிரமாண்டமான படங்களை உதயநிதியின் ரெட் ஜெயன்ட் என்ற நிறுவனமே வெளியிடுகின்றது.

அப்படிப் பார்த்தால் சினிமா துறையிலும் விஜய்க்கு நெருக்கடி வருகின்றது. இந்த நெருக்கடிகளை எப்படி முறியடிக்க முடியும் என்ற பின்னணியில்தான் விஜய்யின் அரசியல் பிரவேசம் அமைந்திருப்பதாக நான் கருதுகின்றேன்.

இலங்கை தமிழ் மக்கள் நிச்சயமாக விஜய்யை நேசிக்கின்றார்கள். இதற்கு நான் பல இடங்களில் சான்று பகிர்வேன். விஜய்யின் ரசிகர்களை நான் முல்லைத்தீவில் பார்த்திருக்கின்றேன்.

மனம் சோர்ந்திருக்கும் மக்கள் கூட விஜய்யை நேசிக்கின்றார்கள். மக்களுக்கு விஜய்யின் மேல் நம்பிக்கை இருக்கின்றது. அந்த நம்பிக்கையை விஜய் எந்தளவு தூரம் காப்பாற்றுவார் என்பதே எனது ஆதங்கமாக இருக்கின்றது.

இலங்கை தமிழ் மக்களை நாட வேண்டுமென்றால் அந்த நாட்டின் அரசின் ஊடாகவே அதனைச் செய்ய வேண்டும். எனவே இதனை விஜய் எவ்வாறு அணுகுவார் என்பதை நாம் பொறுத்திருந்தது தான் பார்க்க வேண்டியுள்ளது. இது தொடர்பில் பெரிய மாற்றங்களை செய்யக் கூடிய இடத்தில் தான் விஜய் இருக்கின்றார்.- என்றார்.

# சோனியா காந்தியின் சொத்து 12 கோடியே 53 லட்சம் ரூபா!

## வேட்புமனுத் தாக்கலில் தெரிவிப்பு



இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தியின் சொத்து மதிப்பு 12 கோடியே 53 லட்சம் ரூபா என்று வேட்புமனுத் தாக்கலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள மாநிலங்களவை தேர்தலில் ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து போட்டியிட சோனியா காந்தி வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

தனக்கு இத்தாலியில் குடும்ப பூர்வீக சொத்தில் பங்கு இருப்பதாகவும், அதன் மதிப்பு 27 லட்சம் ரூபா என்றும் அதில் தெரிவித்துள்ளார். அதிலிருந்து தனக்கு வருமானம் வந்து கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கைவசம் 90 ஆயிரம் ரூபா ரொக்கமாக இருப்பதாகவும் சோனியா காந்தி தெரிவித்துள்ளார். தனது மொத்தச் சொத்து மதிப்பு 12 கோடி 53 லட்சத்து 76 ஆயிரத்து 822 ரூபா எனவும் சோனியா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

# தஞ்சாவூரில் போலி ஆவணம் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு கடவுச்சீட்டு!

## உதவிய பொலிஸ் அதிகாரி கைது!!

(ஷாகுல் ஹமீது)

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் பகுதியில், இலங்கை தமிழர்களுக்குப் போலி ஆவணங்கள் மூலம், கடவுச்சீட்டுப் பெற உதவிய வழக்கில் சேதுபாவாசத்திரம் பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபவாசத்திரம் பொலிஸ் பிரிவில் போலி ஆவணங்கள் மூலம் கடவுச்சீட்டு விநியோகம் செய்யப்படுகிறது என்று கிடைத்த தகவலின் பேரில் க்யூ பிரிவு பொலிஸ் துணை கண்காணிப்பாளர் சிவசங்கரன் தலைமையில் ஆய்வாளர் பிரபாகரன் உள்ளிட்ட 10 பேர் கொண்ட குழுவினர் தீவிர விசாரணையில் ஈடுபட்டனர்.

விசாரணையில், இலங்கைத் தமிழர்களுக்குப் போலியாக ஆவணங்கள் தயாரித்து, அதை இணையவழியில் விண்ணப்பித்தமை, உரிய பொலிஸ் விசாரணை ஏதும் நடத்தாமல் ஒப்புதல் வழங்கியமை, கடவுச்சீட்டு அலுவலகத்தில் உள்ள சிலரின் துணையோடு கடவுச்சீட்டு வழங்கியமை தெரியவந்தது.

இது தொடர்பாக விசாரணையில் சேதுபாவாசத்திரம் பொலிஸார் முறையாக விசாரணை நடத்தாமல் போலி ஆவணங்களுக்கு கடவுச்சீட்டு வழங்க ஒப்புதல் அளித்தமை தெரியவந்தது.

இதையடுத்து, சேதுபாவாசத்திரம் அருகேயுள்ள ஆண்டிக்காடு கிராம முன்னாள் அஞ்சல் ஊழியராகப் பணியாற்றிய கோவிந்தராஜ் (64) கும்பகோணத்தை சேர்ந்த வடிவேல் ராஜ்(31), சேதுபாவாசத்திரம் பொலிஸ் நிலையத்தில் தற்காலிக கணினி இயக்குநராகப் பணிபுரிந்த பாலசிங்கம்(36), திருச்சி கல்கண்டர் கோட்டையைச் சேர்ந்த வைத்தியநாதன் (52), ராஜமடத்தை சேர்ந்த சங்கர் (42) ஆகிய 6 பேரை கடந்த டிசெம்பர் மாதம் க்யூ பிரிவு பொலிஸார் கைது செய்த நிலையில் நீதிமன்றத்தால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கில், கும்பகோணம் பம்பபடையூரை சேர்ந்த சங்கரன்(52) என்பவரயும் கைது செய்தனர்.

இந்த வழக்கில் சேதுபாவாசத்திரம் பொலிஸ் நிலையத்தில் எழுத்தாளராகப் பணியாற்றிய பொலிஸ் அதிகாரி (47 ) தஞ்சை மாவட்ட எஸ்.பி. விசாரணைக்குபின் பணியில் அஜாக்கிரதையாக இருந்ததாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டர்.

இதனையடுத்து உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் விசாரணைக்கு வந்தபோது, போலி ஆவணங்கள் மூலம் கடவுச்சீட்டு பொலிஸ் நிலைய எழுத்தாளர் துணையின்றி பெறமுடியாது, இவ் விவகாரத்தில், சேதுபாவாசத்திரம் பொலிஸ் நிலைய எழுத்தாளர் ஏன் கைது செய்யப்படவில்லை என கேள்வி எழுப்பப்பட்டது.

இதனை அடுத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸ் நிலைய எழுத்தாளர் கைது செய்து, பட்டுக்கோட்டை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில், திருச்சி மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

# பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. நாட்டின் வளர்ச்சிக்காகச் செயற்படுகிறது!

## உள்துறை அமைச்சர் அமித் ஷா வலியுறுத்து




எதிர்வரும் மக்களவைத் தேர்தலை மகாபாரதப் போருடன் ஒப்பிட்டுள்ள உள்துறை அமைச்சர் அமித் ஷா, பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. நாட்டின் வளர்ச்சிக்காகவும், காங்கிரஸின் கீழ் இருக்கும் இண்டியா கூட்டணி கட்சியினர் தங்களின் குடும்பத்துக்காகவுமே வேலை செய்கின்றனர் என்று வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் நடைபெற்று வரும் பா.ஜ.க. தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய உள்துறை அமைச்சர் அமித் ஷா,

எதிர்க்கட்சியினர் வாரிசு அரசியல் மற்றும் சமாதான அரசியலையே வளர்க்கின்றனர். இண்டியா கூட்டணி முழுவதும் 2ஜி, 3ஜி, மற்றும் 4 ஜி கட்சிகளாக நிரம்பியுள்ளன. அந்தக் கட்சிகளை இரண்டாவது, மூன்றாவது, நான்காவது தலைமுறையைச் சேர்ந்த குடும்பத்தினரே நடத்துகின்றனர்.

பிரதமர் மோடி சமுதாயத்தின் அனைத்து பிரிவின் வளர்ச்சிக்காகவும், உலக அளவில் நாட்டை மேம்படுத்துவதற்காகவும் பாடுபட்டுள்ளார். மூன்றாவது முறையாக மோடி பிரதமராக ஆட்சியமைப்பார் என்பது குறித்து மக்கள் மனதில் துளியும் சந்தேகம் இல்லை.

பிரதமர் மோடி ஏழை மக்கள் மற்றும் நாட்டுக்காக யோசித்துக் கொண்டிருக்கையில் சோனியா காந்தி, சரத் பவார், லாலு பிரசாத் யாதவ் மற்றும் மு.க. ஸ்டாலின் போன்றோர் தங்களின் வாரிசுகளை பிரதமராக, முதல்வர்களாக ஆக்குவது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

சக்தி வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர்தான் உயர் பதவிக்கு வர முடியும் என்று அவர்கள் எண்ணுவதால்தான் அனைத்து இளவரசர்களும் பிரதமர் மோடிக்கு எதிராக ஒன்றிணைந்துள்ளனர். ஒருபுறம் பார்த்தால் குடும்பக் கட்சிகள்மற்றொருபுறம்ஏழைத்தாயின்மகன்.

முன்பு வளர்ச்சிப் பணிகளில் விலக்கப்பட்டதாக உணர்ந்த 60 கோடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசு பாடுபட்டுள்ளது. ஆனால் எதிர்க்கட்சிகளோ அனைத்தையும் எதிர்க்கும் நிலையில் உள்ளன. சட்டப்பிரிவு 370 ரத்து, முத்தலாக் தடை, குடியுரிமை (திருத்தம்) சட்டம் அல்லது புதிய நாடாளுமன்றம் கட்டுதல் என்று அனைத்தையும் எதிர்க்கட்சிகள் எதிர்த்துள்ளன.

காங்கிரஸ் கட்சி சமாதானப்படுத்தும் அரசியலுக்காவே ராமர் கோயில் கும்பாபிஷேக அழைப்பை நிராகரித்தது. பா.ஜ.கவில் குடும்ப அரசியல் இருந்திருந்தால் ஒரு தேநீர் விற்பவரின் மகன் நாட்டின் பிரதமராக ஆகியிருக்க முடியாது.- என்றார்.




# மட்டக்களப்பு இந்துக் கல்லூரியின் 78 ஆவது ஆண்டு நடைப்பயணம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியின் 78 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைப் பயணம் நேற்று சனிக்கிழமை (17) இடம்பெற்றது.

இதன் ஆரம்ப நிகழ்வாக அதிதிகள் மற்றும் பாடசாலை முன்னாள், இன்னாள் அதிபர்கள் பாடசாலை பழைய மாணவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நடைப் பயணம் பாடகாலை வளாகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு, ரயில்வே வீதியை அடைந்து, அங்கிருந்து கல்லடிப் பாலம் ஊடாக கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்தை அடைந்து, பின் மீண்டும் கல்லடிப் பாலம் ஊடாக மட்டக்களப்பு நகர், திருமலை வீதியூடாக பாடசாலையை வந்தடைந்தது.

“ஒன்றுபடுவோம் உயர்வோம்” எனும் தொனிப்பொருளில் இந்த நடைப் பயணம் இடம் பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அரச பாடசாலையாக இந்துக் கல்லூரி திகழ்கிறது. இந்தக் கல்லூரியானது தனது 78 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் பல்வேறு நிகழ்வுகளை நடத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வருவதாகப் பழைய மாணவர் சங்கத் தலைவர் எம்.சதீஸ்குமார் தெரிவித்தார்.















# மூதூர் தக்வாநகர் கடலரிப்பை தடுப்பதற்கு விசேடநடவடிக்கை

(கே. எ. ஹமீட் )

மூதூர் கடற்கரைப் பிரதேசங்களில் ஏற்பட்டிருந்த கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டு தக்வா நகர் தவிர ஏனைய பிரதேசங்களுக்கு தடுப்புச்சுவர் போடப்பட்டுள்ளது.

தக்வா நகர் பிரதேசத்துக்குத் தடுப்புச் சுவர் அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. உரிய இடத்தை, மீன்பிடித் திணைக்கள திருகோணமலை உதவிப் பணிப்பாளர் குழு பார்வையிட்டது. இதன்போது மூதூர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழு தலைவர் ஜவாத்தும் கலந்துகொண்டார்.



# நாவிதன்வெளியில் அறநெறி ஆசிரியருக்கு விழிப்புணர்வு!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன் வெளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி தலைமையில் நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

அறநெறிப் பாடசாலை கல்வியின் அவசியம், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய பாடத்திட்டம் தொடர்பில் விளக்கமளித்தல், அறநெறி பாடசாலைகளில் மாணவர்களை அதிகரிக்கச் செய்வதற்கான வழிமுறைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆசிரியர்களுக்கு இங்கு விளக்கமளிக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் இந்து கலாசார திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் கே ஜெயராஜ், நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கே. நீலேந்திரன், திருமதி. பா. சரோஜினி, மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர் திருமதி வி. நகுலநாயகி, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். எம்.ஷினாஸ், உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள், அறநெறி பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# கல்முனை றோயல் வித்தியாலயத்துக்கு போட்டோ கொப்பி இயந்திரம் வழங்கல்

(எம்.என்.எம்.அப்ராஸ்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்முனை கீறின் பீல்ட் தொடர்மாடி குடியிருப்பு பகுதியில் உள்ள றோயல் வித்தியாலயத்தின் நீண்ட கால தேவையாக இருந்து வந்த போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் எம்.எச்.எம்.அன்சார், பாடசாலையின் தேவைப்பாடுகள் குறித்து ஏ.ஆர் மன்சூர் பௌன்டேஷனிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, முன்னாள் வர்தக வாணிப துறை அமைச்சரும், குவைத் நாட்டுக்கான முன்னாள் தூதுவருமான மர்ஹூம் கலாநிதி ஏ.ஆர்.மன்சூரின் புதல்வியும், ஏ.ஆர் மன்சூர் பௌன்டேஷன் மற்றும் ஆஸ்திரேலிய முஸ்லிம் பெண்கள் கவுன்சிலின் தலைவியும் சட்டதரணியுமான மர்யம் மன்சூர் நளிமுதீனால் ஏ.ஆர்.மன்சூர் பௌன்டேஷன் அமைப்பின் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.



இந்த ஆண்டுக்கான ஆரம்ப நிகழ்வு கல்முனை றோயல் வித்தியாலயத்தில் இடம்பெற்றபோது பாடசாலைக்கு போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



# கரையோரத் தூய்மைப்படுத்தல் களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில்

(பழுவூரான்)

மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கரையோரப் பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தல் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (15) மாங்காடு கிராம சேவகர் பிரிவில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் மற்றும் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த வேலைத்திட்டம் கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படும் “கிழக்கு கரையோரங்களை தூய்மையாக பேணுதல்” எனும் திட்டத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் அமைந்திருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் பிரதேச மக்களுடன் இணைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கடல் சார் சூழல் அதிகார சபை மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் கரையோரங்கள் சுத்தம் செய்யப்பட்டன.

இந்த நிகழ்வைப் பிரதேச செயலக கரையோரம் பேணல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான யோ.நிசந்தராசன் மற்றும் ஆ. ஜெகரூபன் ஆகியோர் இணைந்து ஒருங்கிணைப்பு செய்திருந்தனர்.